1968 ஆகஸ்ட் 23]

Acquisition of wet lands for buildings.

* 109 *Q.*—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government have passed orders permitting the acquisition of wet lands in Kumbakonam taluk of Thanjavur district after 1st April 1967 for the construction of buildings?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டத்தில் கட்டடங்கள் கட்டுவதற்காக நன்செய் நிலங்களைக் கையகப் படுத்துவதற்காக ஆணைகள் எதையும் 1—4—1967-க்குப் பிறகு அரசாங்கம் பிறப்பிக்கவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : தமிழக அரசுப் போக்குவரத்துத் றைக்குகட்டடம் கட்டுவதற்காக நில ஆர்ஜிதம் செய்வதற்கு நஞ்சை நிலங்கள் வாங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படி எதுவும் ஆணைகள் பிறப் பிக்கவில்லை என்று சொன்னேன்.

திரு. கே. விநயகம் : நில ஆர்ஜிதச் சட்டப்படி நஞ்சை நிலங்களை எந்தக் காரணத்திற்காகவும் அக்வயர் செய்யக்கூடாது என்று இருக்கிறது. அப்படி இருக்கும்போது 1—4—1967–க்குப் பிறகு ஆணை பிறப்பிக்கபடாமல் இருக்க லாம். அதற்கு முந்திய நாட்களில் நஞ்சை நிலங்கள் அக்வயர் செய்யப் பட்டிருக்கின்றனவா ?

(**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** நிறைய எடுத்திருக்கிறார்கள்.)

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதற்கான முழு விவரங்கள் என்னிடத்தில் இல்லை.

திருவோணம் பகுதிக்குப் பாசன வாய்க்கால்

* 110 வினா—**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தஞ்சை ஜில்லா, திருவோணம் பகுதியிலுள்ள சில கிராமங் களின் பாய்ச்சலுக்காகக் கல்லணைக் கால்வாயிலிருந்து நெய்வேலி வாய்க் கால் என்ற பெயரில் ஒரு வாய்க்கால் பிரிக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனை செய்யப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் முடிவுகள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்திற்கு அதிகச் செலவாகுமாதலால், இதனை நிறை வேற்றுவதற்கு எடுத்துக்கொள்ள இயலாது.

திரு. ரா. ராமச்சந்திர துரை : மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள, விவசாய முன்னேற்றத்திற்கே வழியில்லாத நிலையில் உள்ள என் பகுதி; இந்த நெய்வேலி வாய்க்கால் திட்டத்தை நிறைவேற்றினால் பயன்படும். கிட்டத்தட்ட 1,500 ஏக்கரா பாசன வசதிபெறும். ஆகவே இதனை மறு பரிசீலனை செய்ய அரசாங்கம் முனவருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : காவேரி மேட்டூர் திட்டத்தின்கீழ் மேலும் பாசன அளவைச் சேர்த்துக்கொள்ளத் தலைமைப்பொறியாளர் இயலாது என்று குறிப்பிட்டிருப்பதாலும், திட்டத்திற்கு ஆகும் செலவை விடப் பயன் குறைவாக இருப்பதாலும் இது தற்போது நிறுத்தப்பட்டிருக் கிறது.